# நடப்பு நிகழ்வுகள்- ஆகஸ்ட் 25 - 2017

- பேரழிவு தடுப்பு மற்றும் நிவாரணம் தொடர்பான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (Shanghai Cooperation Organization) உறுப்பு நாட்டுத் தலைவர்களின் 9-வது கூட்டம் ஆகஸ்ட் 24 அன்று கிர்கிஸ் குடியரசு நாட்டில் உள்ள சோபோன் அட்டா நகரில் தொடங்கியது. இந்தியாவின் சார்பில் ராஜ்நாத்சிங் பங்கேற்றார்.

- அறிவுசார் சொத்துரிமை அமலாக்க தேசிய பட்டறை (National Workshop on Enforcement of IPRs) புதுடெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் (24.8.17) தொடங்கிவைத்தார்.

- ஆதார் அட்டைக்கான விவரங்களால் தனிமனித சுதந்திரம் பறிக்கப்படுவதாகத் தொடரப்பட்ட வழக்கில் தனிமனித சுதந்திரம் என்பது அனைவருக்கும் முக்கியமானது "தனிமனித ரகசியம் என்பது அடிப்படை உரிமையே" என்று JS.கேஹர் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு (24.8.17) தீர்ப்பளித்துள்ளது.

- இரஷ்யாவின் மாஸ்கோ நகரில் ஆகஸ்ட் 24 முதல் செப்டம்பர் 3 வரை சர்வதேச ராணுவ இசைத்திருவிழா நடக்கிறது. இத்திருவிழாவில் இந்திய கடற்படையின் இசைமேளக்குழுவான 'திரி-சேவைகள்' பங்குகொள்கிறது.

- ஏர் இந்தியா நிறுவனத்தின் புதிய தலைமை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநராக இராஜீவ் பன்சால் நியமிக்கப்பட்டுள்ளார். தற்சமயம் இவர் பெட்ரோலிய துறையின் கூடுதல் செயலராகவும் நிதி ஆலோசராகவும் பணியிலுள்ளார்.

- சென்னை தரமணியில் 10 ஏக்கரில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகமை நிதியுதவி மற்றும் (ஜிகா) தொழில்நுட்பத்துடன் கட்டப்படவுள்ள தரைகீழ் நீர்தேக்க மழைநீர் திட்டத்திற்கு முதல்வர் கே.பழனிச்சாமி அடிக்கல் நாட்டினார். இந்த மழைநீர் சேகரிப்புத்திட்டம் 6 லட்சம் லிட்டர் கொள்ளவுடன் கட்டப்படவுள்ளது.

OXFORD IAS ACADEMY

- தமிழ்தாத்தா உ.வே.சாமிநாதர் பவளவிழாவை முன்னிட்டு 42 ஆண்டுகளுக்கு பிறகு பத்துப்பாட்டு நூலின் 4-வது பதிப்பு சென்னை பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்டது.

- "I Do What I Do" எனும் நூலை முன்னால் ரிசர்வ் வங்கி ஆளுநர் இரகுராம் ராஜன் எழுதியுள்ளார். குழப்பம் மற்றும் உற்சாகங்கள் நிறைந்த RBI–ன் தலைமைபொறுப்பு காலங்களை இந்த நூல் விவரிக்கிறது. இந்நூல் ஹார்பர்கோலின் இந்திய நிறுவனத்தால் செப்-4 அன்று சென்னையில் வெளியிடப்படவுள்ளது.

- கூகுள் நிறுவனம் புதிதாக "ஆண்ராய்டு ஓரியோ" (Android Oreo) என்ற பெயரில் ஆண்ராய்டு 8.0 (Android 8.0) பதிப்பை வெளியிட்டுள்ளது.

- இந்திய கடலோர காவல்படையில் 30 ஆண்டுகள் சேவையாற்றி வந்த வருணா கப்பல் தனது சிறப்பான பயணத்தை முடித்துக்கொண்டு ஓய்வு பெற்றது. 1984-ல் தயாராகி 1988-ம் ஆண்டு கடலோரக் காவல் படையில் இணைக்கப்பட்டது.

- உலகிலேயே இரண்டாவதாக அதிககாலம் அதிபராக பதவிவகித்த அங்கோலா நாட்டின் அதிபர் தாஸ் சண்டோஸ் அரசியல் வாழ்வில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 38 ஆண்டுகளாக பதவிவகித்த இவர் உடல்நலக்குறைவால் ஓய்வு பெறுகிறார். உலகிலேயே அதிபராக அதிக காலம் பதவி வகித்ததில் கியானா நாட்டின் டியோடோரோ ஒபியாங் முதலிடத்தில் உள்ளார்.

- மும்பையில் நடைபெற்ற இந்தியா, மொரிசியஸ், செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஆகிய நாடுகள் பங்குபெற்ற முத்தரப்பு கால்பந்து தொடரில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது.

- தமிழகத்தில் அனைத்து பள்ளிகளிலும் +1,+2 மாணவர்கள் சேர்க்கையில் SC,ST மாணவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக தமிழக அரசு 1990-ல் பிறப்பித்த அரசாணையை தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது.